## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

## திருவண்ணாமலை மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.274/15

2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.சம்மந்தன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.சம்மந்தன். |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.செல்லபெருமாள் |
| கிராமம் | - வடபூண்டிபட்டு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

12.04.2023

**வா.சா.1.**

**11ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவாவில் 1வது அயிட்ட சொத்தில் 3ல் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 25 அயிட்ட சொத்தில் நான் பாகம் எதுவும் கேட்கவில்லை. இந்த வழக்கில் 11வது பிரதிவாதியாக மணிவண்ணன் என்பவரை வழக்கு தரப்பினராக சேர்த்துள்ளேன். அசல் வழக்கு எண்.107/16 மற்றும் அசல் வழக்கு எண்.260/15 ஆகிய வழக்குகளில் 11ம் பிரதிவாதியை நான் தரப்பினராக சேர்க்கவில்லை. அந்த வழக்குகளிலும் பாகம்கோரிதான் தாக்கல் செய்தேன். எனது தகப்பனார் செல்லபெருமாள் உயிருடன் இருந்த காலத்திலேயே சுந்தரமூர்த்தி மற்றும் சரோஜா ஆகியோருக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். அதனால்தான் நான் மேற்படி 2 வழக்குகளிலும்

மணிவண்ணனை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். 11வது பிரதிவாதியின் தாயார் சரோஜாம்மாளுக்கு தாவா சொத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

2) நான் சொல்வது பொய் என்றும், 11ம் பிரதிவாதியின் தாயார் சரோஜாம்மாள் சுந்தரமூர்த்தி என்பவருக்கு தனது பாக சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 14 செண்ட் நிலம் மட்டும்தான் கிரையம் கொடுத்துள்ளார். நான் சொல்வது பொய் என்றும் தாவா சொத்தில் 11ம் பிரதிவாதிக்கு எந்தவித பாக உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. மணிவண்ணனுக்கு பாகமே இல்லாத ஒரு சொத்தை வழக்கில் சேர்த்து மணிவண்ணனையும் தரப்பினராக சேர்த்து நான் தாக்கல் செய்துள்ள இத்தாவா நிலைக்கத்தக்கது அல்ல. மணிவண்ணனுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழி பாக பிரிவினைதான். நான் சொல்வது பொய் என்றும், 11ம் பிரதிவாதியை அலைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த வழக்கில் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றும் எனவே தாவா செலவுதொகையோடு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 11ம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசிய தரப்பினர் அல்ல என்றும் அவரை இவ்வழக்கில் தவறாக சேர்த்துள்ளதால் இவ்வழக்கு தள்ளபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.